வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   31.12.2024 செவ்வாய்க்கிழமை   இதழ் : 365   பக்கங்கள் : 12




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து தமிழினம் முன்செல்ல முடியாது!

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெம்பர் 31

தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை இழந்த பாதையை தொடர்கின்ற வகையில் கட்சியின் முடிவுகள், பதவிகள் அமையக்கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக உள்ளமையினால் அந்தக் கட்சியைத் தவிர்த்து தமிழினம் முன்செல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பைச் சரியாக புரிந்து கொண்டு, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தை கட்சி தொடர்ந்தும் அனுமதிப்பதன் ஊடாக தொடர்ந்தும் ஒரு மோசமான கொள்கை ரீதியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தள்ளும் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு சமகால அரசியல்

11

## நாகை - காங்கேசன் கப்பல்சேவை ஜனவரி 2 முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

நாகபட்டினம் மற்றும் காங்கேசன் துறை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை புத்தாண்டு முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

தமிழகத்துக்கும், இலங்கைக்கும் இடையேயான கப்பல் போக்குவரத்து சேவை 40 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

மோசமான வானிலை காரணமாக அந்த

11

## நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவை சீரமைக்கும் பாதுகாப்பு அமைச்சு!

கொழும்பு, டிசெ. 31

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவை மறுசீரமைத்து, முழுமையான புலனாய்வுப் பிரிவாக மீண்டும் நிறுவுவதற்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் ஒரு பணிப்பாளரின் கீழ் தனி புலனாய்வு பிரிவாக இந்த பிரிவு செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, நிதிக் குற்றப்பிரிவு என்பது குற்றப்

11

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேசமே தீர்வை வழங்கவேண்டும்

### வடக்கு - கிழக்கில் கவனயீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாதாந்தம்

11




## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மன்னாரில் போராட்டம்!

மன்னார், டிசெ. 31

மன்னாரில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், அர சியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, மன்னாரில் நேற்று காலை கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

11



## மகிந்தவை அரசியலிலிருந்து நீக்க அநுரவின் அரசு முயற்சி!

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அரசியலிலிருந்து நீக்க அரசாங்கம் முயற்சிப்பதாக பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த

11

## புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ரொட்றிக்கோ



கொழும்பு, டிசெ. 31

25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசன்ன ரொட்றிக்கோ நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பதவியில் தற்போது கட மையாற்றும் லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயின் சேவை நீடிப்பு இன்றுடன் நிறைவடையும் நிலையில் இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

11

## ஆசியாவில் பசுமையான தீவாக இலங்கையை மாற்ற திட்டங்கள்!

### ஜனாதிபதி அநுரகுமார பணிப்புரை

கொழும்பு, டிசெ. 31

இலங்கையை சுற்றுலாப் பயணிகளின் கவரக்கூடிய இடமாக மாற்றுவதற்குத் தேவையான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கிளீன் சிறீலங்கா திட்டத்தை மீளமைப்பதன் ஊடாக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் வலுவடையும் என

11

## வடக்கில் மழை நீடிக்கும்

கொழும்பு, டிசெ. 31

அடுத்து வரும் சில நாட்களுக்கு நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக் கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும்

11

## 12,000 மெற்றிக் தொன் அரிசி கொழும்பு துறைமுகம் வந்தது

கொழும்பு, டிசெ. 31

12 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, கொழும்பு துறைமுகத்தில் தரையிறக்கப்படவுள்ளதாக இலங்கை சுங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய, தனியார் துறையினரால் 75 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அதில் 32 ஆயிரம் மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 43 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் அடங்குவதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## யாழில் சயனைட் அருந்தி நகை தொழிலாளி மரணம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணத்தில் சயனைட் அருந்தி நகை தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த தேவதாஸ் திலீப்குமார் (வயது 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தரும் அவரது மகனும் கன்னாதிட்டிப் பகுதியில் உள்ள நகை செய்யும் இடத்தில் வேலை செய்து வந்தனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு துறையை கட்டியெழுப்பும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது

## இளங்குமரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31

கூட்டுறவு சங்கம் முன்னைய காலத்தில் எவ்வாறு இருந்தது, இப்போது எவ்வாறு இருக்கிறது என்று அனைவரும் சிந்திக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் செயலிழந்த நிலையில் சென்று கொண்டிருக்கின்றன. கூட்டுறவு துறையை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்கு உள்ளது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ- 05)

# கைவிடப்பட்ட அரிசி ஆலைகளை மீண்டும் பயன்பாட்டுக்கு தயார்ப்படுத்த பணிப்புரை

கொழும்பு, டிசெ. 31

பல வருடங்களாக கைவிடப்பட்டுள்ள அரசாங்கத்தின் அரிசி ஆலைகளின் களஞ்சிய சாலைகளை மீண்டும் பயன்பாட்டுக்காக தயார்ப்படுத்துமாறு வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஹிங்குரக்கொட சதொச அரிசி ஆலையின் களஞ்சிய சாலை மற்றும் கல்கமுவ அரசாங்க நெற் களஞ்சியசாலை ஆகியவற்றுக்கான கள விஜயத்தின் பின்னர் அமைச்சர் இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

நாட்டில் மீண்டுமொரு அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காகக் குறித்த அரிசி ஆலைகளைத் தயார்ப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# பட்டிமன்ற இளம் பேச்சாளர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 31

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நடாத்திய மார்கழிப் பெருவிழாவில் இடம் பெற்ற இளையோர் பட்டிமன்ற நிறைவில் நடுவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், மகாஜன கல்லூரி மாணவன் சிவராசா சிவர்த்தன், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி வைஷ்ணவி சிவாஸ்கரன், யாழ் இந்துக் கல்லூரி மாணவன் இந்திரஜித் கார்த்திகன், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய மாணவி தரணிகா தவரசருபன் ஆகியோர் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தனால் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# வெள்ளத்தில் மூழ்கிய காலி!

கொழும்பு, டிசெ. 31

நேற்று முன் தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக காலி நகரின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

காலி - வக்வெல்ல, காலி - மாபலகம, காலி - பத்தேகம ஆகிய பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதன் காரணமாக அப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மழைநீரை முறையாக வெளியேற்றுவதற்கு கால்வாய்கள் மற்றும் வடிகால் அமைப்புகளை துப்புரவு செய்யாமை மற்றும் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களால் சிறு மழை பெய்தாலும் காலி நகரம் வெள்ளத்தில் மூழ்குவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பூநகரி பிரதேசசபைக்கு விருது!




யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மாகாண சுற்றுலாத் துறையில் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கிய உள்ளூராட்சிச் சபைக்கான விருது பூநகரி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த விருது வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் விருதை வழங்க பூநகரி பிரதேச சபை செயலாளர் இரட்ணம் தயாபரன் பெற்றுக்கொண்டார்.

# ரூபாயின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, டிசெ. 31

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 288 ரூபாய் 33 சதம், விற்பனைப் பெறுமதி 297 ரூபாய் 6 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 361 ரூபாய் 10 சதம், விற்பனைப் பெறுமதி 375 ரூபா 10 சதம். யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 298 ரூபாய் 78 சதம், விற்பனைப் பெறுமதி 311 ரூபாய் 36 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 316 ரூபாய் 76 சதம், விற்பனைப் பெறுமதி 332 ரூபாய் 18 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 198 ரூபா 80 சதம், விற்பனைப் பெறுமதி 207 ரூபாய் 55 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 177 ரூபாய் 81 சதம், விற்பனைப் பெறுமதி 187 ரூபாய் 25 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 210 ரூபாய் 57 சதம், விற்பனைப் பெறுமதி 220 ரூபாய் 47 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 82 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 89 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# மன்மோகன் சிங்குக்கு மகிந்த ராஜபக்ஷ அஞ்சலி

கொழும்பு, டிசெ. 31

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங் தனது 92 ஆவது வயதில் கடந்த 26 ஆம் திகதி காலமானார்.

திடீர் உடல்நலக்குறைவால் டெல்லியில் உள்ள எய்ம்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் வயது மூப்பு, உடல்நலக் குறைவு, மூச்சு திணறல் ஆகிய காரணங்களால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (அ)

# மகிந்தவின் பேச்சாளராக மனோஜ்

கொழும்பு, டிசெ. 31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ ஊடகப் பேச்சாளராக கடந்த 20ஆம் திகதி சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் நேற்று திங்கட்கிழமை விஜயராமவிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகேயிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

# காட்டு யானைப் பிரச்னைக்கு தீர்வு கோரி மக்கள் போராட்டம்



கொழும்பு, டிசெ. 31

அனுராதபுரத்தில் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழையும் பிரச்சினைக்கு தீர்வுக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தந்திரிமலை பிரதான வீதியின் ஓயாமடுவ பகுதியில் நேற்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யானைகளால் பயிர்கள் பாரியளவில் சேதமடைந்துள்ளதாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

மக்கள் வீதியை மறித்து பதாதைகளை ஏந்திவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை கலைக்க பொலிஸார் முயற்சித்தபோதிலும் அது தோல்வியுற்றதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# உள்நாட்டு துப்பாக்கி, கோடாவுடன் வவுனியாவில் நேற்று ஒருவர் கைது

வவுனியா, டிசெ.31

உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கி மற்றும் 18, 000 மில்லி லீற்றர் கோடாவுடன் வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரண்டாம் செங்கல்படை பகுதியில் விசேட சுற்றிவளைப்பு ஒன்றை பூவரசன்குளம் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது, உள்நாட்டு துப்பாக்கி மற்றும் பரல் ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்திக்கான 18,000 மில்லி லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு, கைதுசெய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
31.12.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## மதத் தலங்களுக்கான கொள்கை என்ன?

புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி சட்டவிரோத மதத் தலங்களுக்கு தங்களுடைய ஆட்சியில் இடமில்லை - கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றது போன்று எங்களுடைய ஆட்சியில் இடம்பெற நாம் அனுமதிக்கப் போவதில்லை என்று தெரிவித்திருக்கின்றார். இந்த அறிவிப்பை வரவேற்கலாம். ஆனால், முதலில் ‘சட்டவிரோத மதத் தலங்கள்’ என்பதன் பொருள் என்ன என்பது தெளிவாக வரையறை செய்யப்படவேண்டும்.

இலங்கையின் அரசியல் யாப்பின்படி பௌத்தம் அரச மதமாகும் - அந்த வகையில் பௌத்தத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. இந்த அடிப்படையில்தான் பௌத்தம் சட்டத்திற்கு அப்பால்பட்டது என்னும் அடிப்படையில் பௌத்த பிக்குகள் செயல்பட்டுவருகின்றனர். பிக்குகளில் எதேச்சதிகார அணுகுமுறைகளே இலங்கையின் மத நெருக்கடிக்கான அடிப்படையான காரணமாக இருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் தாங்கள் விரும்பும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வைக்க முடியும் - அவ்வாறு வைக்கப்படும் சிலைகளுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கும் என்னும் அடிப்படையில்தான் இதுவரையான செயல்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நிலைமையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாற்றங்களை ஏற்படுத்துமா? அவர்களால் முடியுமா? - அதற்கான அரசியல் விருப்புறுதி அரசாங்கத்திடம் இருக்கின்றதா?

ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் கட்சிகளின் நிறங்களை கடந்து, ஒரு நிறத்திற்கு முன்னால் மண்டியிடும் வரலாறே இதுவரையான இலங்கைத் தீவின் வரலாறாக இருக்கின்றது. அதாவது காவிக்கு முன்னால் எந்தக் கட்சி பேதமும் இருப்பதில்லை - அதிகாரத்துக்காக தங்களுக்குள் அடிபடும் தென்னிலங்கை கட்சிகள் அனைத்துமே, காவிக்கு முன்னால் சரணாகதி நிலையிலேயே இருப்பதுண்டு. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் வடக்கு, கிழக்கில் பௌத்த மதக் கட்டமைப்புகள் பௌத்தத்தை ஓர் ஆக்கிரமிப்பு கருவியாக கைக்கொண்டு வருகின்றனர். இதனை தடுத்து நிறுத்தும் அரசியல் உறுதிப்பாடு புதிய அரசாங்கத்திடம் இருக்குமாயின் அதனை தமிழர்கள் வரவேற்க வேண்டும்.

ஆனால், சட்டவிரோத மதத் தலங்களுக்கு அனுமதியில்லை என்று கூறுகின்றபோது, சட்டத்துக்கு உட்படுதல் என்றால் என்ன என்பது தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற, பௌத்தத்தை வழிபடுவதற்கான மக்கள் இல்லாத இடங்களில் எதற்காக பௌத்த தலங்கள் என்னும் கேள்வியின் அடிப்படையில் அரசாங்கம் விடயங்களை கையாண்டால் மட்டும்தான், இந்தப் பிரச்னையை தமிழ் மக்களுக்கு தீங்கற்ற வகையில் கையாள முடியும். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றதா?

அடுத்த பிரச்னை வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த பண்டைய பௌத்த தலங்கள் பற்றியது. இங்குள்ள பிரச்னை என்னவென்றால் - ஒரு காலத்தில் வடக்கு, கிழக்கில் தமிழ் பௌத்தம் நிலைகொண்டிருந்தது. அது உண்மை - ஆனால், அவற்றை சிங்கள பௌத்தர்களுக்கானதாக அடையாளப்படுத்தும் போதுதான் பிரச்னை ஏற்படுகின்றது. கடந்த காலத்தில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் இந்தப் பிரச்னையை பொறுப்புடன் அணுகியிருக்கவில்லை. பிக்குகள் மற்றும் பௌத்த கட்டமைப்புக்கள் தமிழ் பௌத்தத்தை தங்களின் மேலாதிக்க நோக்கிற்காக சிங்கள பௌத்தமாக சித்தரிக்க முற்படுகின்றனர். இவற்றை கருத்தில் கொண்டு சிந்தித்தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு, கிழக்கில் பௌத்தம் தொடர்பான கொள்கை நிலைப்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம்தான் இந்தப் பிரச்னையை கையாள முடியும்.

## டான் தொலைக்காட்சியின் சாதனைத் தமிழன் 2024 விருது பெறுகிறார் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி

**செந்தமிழ்ச் சொல்லருவி**
**சந்திரமௌலீசன் லலீசன்**
(தலைவர், டான் சாதனைத் தமிழன் விருதுத் தெரிவுக் குழு)

*டான் குழுமத்தால் நடத்தப்படும் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வுகள் 31.12.2024 செவ்வாய்கிழமை இரவு மட்டக்களப்பு நகரில் உள்ள தனியார் பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற உள்ளன. இதில் சிறப்பம்சமாக டான் குழுமம் வழங்கும் உயரிய விருதான சாதனைத் தமிழன் விருது கையளிக்கப்படவுள்ளது அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.*



தனியொருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம் என்பது பாரதியின் கூற்று. உண்டி கொடுத்து உயிர் கொடுத்து உயர்ந்து நிற்கும் ஒருவர் சத்தம் சந்தடியின்றி எங்கள் மண்ணில் உயர் பணிகள் மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கையில் வருடம் 365 நாட்களும் மூன்று வேளை உணவளிப்பது மட்டுமன்றி ஆதரவற்ற உறவுகளுக்கு ஆதரவளித்து அவர்களை பராமரிப்பதுடன் சமூக மட்டத்தில் வசதியற்ற குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் மருத்துவம், கல்வி, வாழ்வா தாரத்திற்கு உறுதுணையாக தன்னை நிலை நிறுத்துவதெனத் தொண்டுகளை ஆற்றித் தனிப்பெரும் தகைமையாளராக வாழும் மனிதர் இவர். சந்நிதிக் கந்தனின் நடமாடும் வடிவமாகவே பலர் அவரைக் காண்கின்றனர்.

வீரமும் துணிவும் இயல்பாய் வளரும் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் செந்திவேல் - மல்லிகா தம்பதியருக்கு 31.08.1949 ஆம் ஆண்டு மோகனதாஸ் எனும் நாமத்துடன் இம் மண்ணில் பிறந்த பெருந்தகையே இன்று சாதனைத் தமிழனாக உயர்ந்து நிற்கின்றார்.

செல்வச்சந்நிதியில் ஆனந்தாச்சிரமம் நடத்திய மயில்வாகனம் சுவாமிகளை சிறுவயது முதல் தனது குருவாக ஏற்று அவர்காட்டிய வழியில் பணிகளை மேற்கொண்ட இவர். 1985இல் சுவாமி பூரணம் அடையும் வரை அன்னதானம் இடும் பணியை அவரது தலைமையின் கீழ் செவ்வனே செய்தார். தொடர்ந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைப் பாதிப்புகளுக்குப் பின்னர் 1988இல் சந்நியான் ஆச்சிரமத்தை நிறுவி தன்பணிகளைத் தொடர்ந்தார். 05.05.1995 இல் சந்நிதியான் ஆச்சிரமம் இன்றுள்ள இடத்தில் தனது பணிகளை மேற்கொள்ளத் தொடங்கிற்று.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதன்மையான பணி பசிப்பிணி போக்குதல் ஆகும். இன்று (2024) 65 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றார்கள். இதைவிட பெருநாள்களில் உடுபுடைவைகள் வழங்கியும் அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இதைவிட கோவில் சூழலுக்கு வரும் அன்பர்கள் எவரெனினும் உணவு வழங்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றனர்.

கல்விப் பணியில் கரம் கொடுப்பதில் சமய பேதம் பாராது மோகனதாஸ் சுவாமி உதவி வருகின்றார். பல்கலைக்கழக மாணவர்கள் நூற்றைம்பதிற்கும் மேற்பட்டோர் சமய சமூக பேதம் இன்றி மாதம் தோறும் 6,000 ரூபா வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இதைவிட கற்றல் தேவையுடையோருக்கு துவிச்சக்கரவண்டிகள் புத்தகப் பைகள் போன்ற - ஏற்ற உதவிகளை வழங்கி அவர்களுக்கு உதவுகின்றார்.

2014 ஆம் ஆண்டில் மலையகத்தில் மீரியப்பொத்தவில் ஏற்பட்ட மண்சரிவின் போது முதன்முதலாக அந்த மக்களைத் தேடி மோகன் சுவாமியின் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம பாரவூர்திகளே உதவிப் பொருள்களுடன் முதலில் சென்றன. அன்று தொடக்கம் ஆச்சிரமப் பணிகள் இலங்கையின் பல பாகங்களுக்கும் விரிவுற்று வருகின்றது. பிரதேச வேறுபாடு இன்றி வாழ்வாதாரப் பணிகளை வழங்கி வருகின்றார். நலிவுற்ற மக்கள் பலர் இதனால் பெருநன்மை அடைந்து வருகின்றனர்.

ஆச்சிரமத்தினால் நடத்தப்படும் நடமாடும் மருத்துவ சேவைகள் ஊடாகப் பலர் நன்மை அடைகின்றனர். இதைவிட வைத்திய சாலைகளின் மருந்துத் தேவைகளையும் குறிப்பிடத்தக்க அளவில் தீர்ப்பதற்குத் தன்னாலான பங்களிப்புகளை நல்கி வருகின்றார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகை 25 ஆண்டுகளைக் கடந்து மாதா மாதம் தொடர்ச்சியாக ஒழுங்காக வெளிவருகின்ற ஆன்மீக சஞ்சிகையாக விளங்குகின்றது. உலகெங்கும் ஆன்மீக ஞான ஒளியைத் தன் எழுத்துகளால் பரப்பி வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையில் வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் பங்கேற்றவர்கள் இன்று பிரபல சொற்பொழிவாளர்களாகவும் பாடகர்களாகவும் விளங்குகின்றனர்.

ஆன்மீகப் பணி என்பது கோவிலை மையப்படுத்திய பணி என்பதற்கு அப்பால் குடிகளைத் தழுவிய பணிகள்தான். - அதிலும் சமய பேதம் பாராது மனிதத்தை உயர்வாகப் போற்றும் பணிகள்தான் - என்று நிருபித்து வாழ்ந்து காட்டுகின்றார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் இணைத்துப்பார்த்து கோபப்பட்டு கொண்டிருக்காதீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தோற்றப்பொலிவு கூடும். பாதியில் நின்ற வேலைகள் முடிவடையும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும் தன்னம்பிக்கை குறையும் பதறாமல் பக்குவமாக செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புதுவேலை கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

**மீனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புகழ் உயரும் நாள்.

# தாறுமாறாக ஓடிய தனியார் பஸ்ஸின் அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித் தடத்தில் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த தனியார் பேருந்து உரிமையாளருக்கு வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து சேவைக்கான அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க. மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கு அறிவித்துள்ளார்.

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் குறித்த பஸ் பயணித்தமை தொடர்பில் சமூக ஊடகங்களில் காணொலிகள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருக்கு ஆளுநர் அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கமைவாக குறித்த பேருந்தின் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் சாரதி, நடத்துநர் மற்றும் சிற்றூர்தியின் உரிமையாளர் மேலதிக நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களுடன் அதிகார சபைக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகார சபையின் தலைவர் அறிவித்துள்ளார். (எ-05)

# பனை மரங்களை வெட்டியவர்களுக்கு எதிராக பனை அபிவிருத்தி சபையால் வழக்கு தாக்கல்



யாழ்ப்பாணம், டிசெ.31

யாழில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருபாலை மற்றும் நீர்வேலிப் பகுதியில் இவ்வாறு பனை மரங்கள் வெட்டப்பட் டுள்ளன. இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி. சகாதேவனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

இதேவேளை, அண்மையில் தனங்கிளப்புப் பகுதியில் சட்டவிரோ தமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (எ-05)

# தனியார் பஸ் சாரதியை தாக்கிய சாரதி ஒரு மாத காலத்துக்கு பணிஇடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.31

தனியார் பேருந்தை மறித்து, சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில் மற்றொரு தனியார் பேருந்தின் சாரதி ஒரு மாத காலம் தற்காலிகமாக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க. மகேஸ்வரன் தெரிவித்தார்.

துணுக்காய் - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் கடந்த 5ஆம் திகதி பயணித்த தனியார் பேருந்தை வழிமறித்து நிறுத்தி, அப்பேருந்தின் சாரதியை இருக்கையில் வைத்து தாக்கி அச்சுறுத்தியதாக அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இதற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் தாக்குதலை மேற்கொண்ட சாரதிக்கு முன்னெச்சரிக்கை தண்டனையாக இம்மாதம் 28ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு தற்காலிக பணி இடைநிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது. (எ-05)

# புராண படனம் புதிய வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சிறீ ல சிறீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் புராண படனம், கதாப்பிரசங்கம், சமஸ்க்கிருதம் ஆகிய புதிய பிரிவு வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. ஆறுமாத காலப் பயிற்சி வகுப்பானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளன. இதில் இணைய விரும்புவோர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், வடபிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ 31. 01. 2025 இற்கு முன்பு கற்கவிரும்பும் பாடம், முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகமை, போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அனிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)



வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணையம்பதி சிறீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் சிறீ ஆஞ்சநேயர் ஜனனதின உற்சவம் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.(படங்கள் - பு. கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் இந்திய,சீன விஜயங்கள் குறித்து சபையில் கேள்வி எழுப்பவுள்ளது எதிரணி!

கொழும்பு, டிசெ. 31

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய மற்றும் சீன பயணங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்விக்கணைகளைத் தொடுப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றதென அறியமுடிகின்றது.**

**ஜனாதிபதியின் இந்திய பயணத்தின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடக சந்திப்பை நடத்தி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெளிவுபடுத்தி இருந்தார்.**

இலங்கை அரசாங்க ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி உட்பட இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமே இவ்விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டன என அவர் சுட்டிக்காட்டி இருந்தார்.

அதேபோல எட்கா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், எட்காவுக்கு எதிராக முன்னர் போர்க்கொடி தூக்கியிருந்த ஜே.வி.பியினர் அதனை ஏற்க தயாராகிவருகின்றது என எதிரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. எட்காவை மறைமுகமாக ஏற்கும் வகையிலேயே இலங்கை, இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மறுசீரமைப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே எட்கா ஒப்பந்தம், இலங்கை, இந்திய இணைப்பு திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்திடம் பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை சட்டத்தின் 27இ2 இன்கீழ் அவர் இது பற்றி கேள்வி எழுப்பக்கூடும். அவ்வாறு இல்லாவிட்டால் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைக்கப்படக்கூடும்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக்கூட்டத்தில் இது பற்றி இறுதி முடிவெடுக்கப்படும்.

ஜனவரி முற்பகுதியில் ஜனாதிபதி சீனாவுக்கு செல்கின்றார். அவ்விஜயம் சம்பந்தமாகவும் கேள்விகள் எழுப்படவுள்ளன. (அ)

## வேட்பாளர்களின் விசாரணைகள் நிறைவடைவு

கொழும்பு, டிசெ. 31

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கத் தயார் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது குறித்து அடுத்த அமர்வில் முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (அ)

## மின்சாரம் தாக்கி மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 31

நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாம்புரி பகுதியில் மின்சாரம் தாக்கி புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பேரில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்கள் 16, 22 மற்றும் 29 வயதுடைய புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மாம்புரி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் ஊழியர்கள் குழுவொன்று வேலை செய்துகொண்டிருந்தது.

இதன்போது, மின்சாரம் பாய்ந்த மின் சார வயர் இரும்பு கம்பி ஒன்றுடன் தொடர்பு கொண்டதால் இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுரைச் சோலை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

## 2025 இல் பாடசாலை இடம்பெறும் நாட்களின் எண்ணிக்கை திருத்தம்

கொழும்பு, டிசெ. 31

2025 ஆம் ஆண்டில் பாடசாலை இடம்பெறும் நாட்களின் எண்ணிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் வருடத்துக்கு 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடாத்தினாலும் அடுத்த வருடத்தில் அதன் எண்ணிக்கையை 181 நாட்களாக குறைக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அதிகளவிலான அரசு விடுமுறைகளுடன் முதல் தவணை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள், அரசாங்க பாடசாலைகள் மற்றும் பிரிவெனா மாணவர்கள் வருடாந்த கற்றலுக்காக வருகை தரும் நாட்கள் இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையை நிறைவு செய்யும் வகையில், முதல் 03 வாரங்கள் ஜனவரி 2 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொழில்நுட்ப ரீதியாக அடுத்த ஆண்டுக்கான கல்வி யாண்டு ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடத்துக்கான 26 பொது விடுமுறை நாட்களில் 04 விடுமுறை நாட்கள் மாத்திரமே வார இறுதி நாட்களில் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்தும் வார நாட்களாக இருப்பதால் 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடத்த இயலாது, இதனால் பாடசாலைகளை நடத்தும் நாட்கள் 181 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 31

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள "கிளீன் சிறிலங்கா" வேலைத் திட்டம் நாளை 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

"கிளீன் சிறிலங்கா" திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ்.குமாநாயக்க, பதில் பொலிஸ் மா.அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட 18 பேர் ஜனாதிபதி செயலணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

"கிளீன் சிறிலங்கா" திட்டத்தை திட்டமிடல், வழிகாட்டுதல், நடைமுறைப் படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்தல் இந்த ஜனாதிபதி செயலணியின் பொறுப்புகள் ஆகும். (அ)

## சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, டிசெ. 31

வருட இறுதியில் சுற்றுலா தளங்களை பார்வையிடுவதற்காக வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22ஆம் திகதி முதல் நாளாந்தம் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக 10 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நிலப்பரப்பு, உயிர் பல்வகைமை மற்றும் மத, கலாசார விழுமியங்களைக் கொண்ட ஒரு நாடாகும்.

பல நாடுகளில் குளிர் கால நிலை நிலவுகின்ற நிலையில், பூமத்திய ரேகைக்கு அருகில் அமைந்துள்ளமையால் இந்த நாட்டில் சிறந்த வானிலை அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.

இதேவேளை, நாளாந்தம் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சீகிரியாவை பார்வையிட வருவதாக மத்திய கலாசார நிதியத்தின் சிகிரியா திட்ட முகாமையாளர் துசித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வருட இறுதி விடுமுறைக் காலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்புடன் சிலரது செயற்பாடுகளினால் சில சுற்றுலாத் தலங்கள் அழிவடையகூடிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகச் சுற்றுலாத் துறை அமைச்சுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்காரணமாக சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் தலத்தின் பாதுகாப்பு தொடர்பில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் அக்கறையுடன் செயற்படுமாறு சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் கலாநிதி ருவன் ரணசிங்க கோரியுள்ளார்.

இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, குறித்த சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விடுமுறையைக் கழிக்குமாறு சுற்றுலாத் துறை பிரதியமைச்சர் கோரியுள்ளார். (அ)

## நாட்டை முன்னோக்கி செல்ல ஒரு சிலர் தடையாக உள்ளனர்

### பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு ஒருசிலர் தடையாக உள்ளனர் என ஜனசத பெரமுன கட்சியின் தலைவர்பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டை கடந்த காலங்களில் ஆட்சி செய்தோர் ஊழல்களில் ஈடுபட்டனர். அவர்களுடைய பரம்பரைக்கே சொத்து சேர்த்து வைத்துள்ளனர். அவ்வாறான ஒருசிலர் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெயல்வதற்கு தடையாக உள்ளனர்.

மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. நாட்டின் தேவைக்கு ஏற்ப அரிசி உற்பத்தி செய்யப்பட்டாலும் ஆலை உரிமையாளர்கள் அவற்றை மறைத்து வைத்துள்ளனர்.

ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக அரசாங்கம் ஏன் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லை? இந்த முறை புதுவருட கொண்டாட்டத்துக்கு பாற்சோறுக்கான அரிசியை பெற்றுக்கொள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கைவைத்தே மக்கள் ஆட்சியை கையளித்தனர். நாட்டை உரிய முறையில் கொண்டுசெல்ல முடியாவிட்டால் ஜனசத பெரமுன கட்சியிடம் கையளிக்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் 2025 இன் நடுப்பகுதியில்?

## தேசிய மக்கள் சக்தி அரசு திட்டம்

கொழும்பு, டிசெ. 31

**1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் நீண்ட கால மாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடுப் பகுதியில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஏப்ரல் மாதம் நடைபெற விருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைத் தொடர்ந்து, திருத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும் என்றும் அரசு குறிப் பிட்டுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதி அமைச்சர் பிரபா ருவான் செனரத் தெரிவிக்கை யில்- “2025 ஆம் ஆண்டின் நடுப்ப குதியில், மாகாண சபைத் தேர்தல் முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை இரத்துச் செய்து பழைய மாகாண சபைத் தேர்தல் முறைக்கு மாற்றுவதற் கான பிரேரணையை பாராளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தல்களுக்குப் பிறகுதான் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்பார்க்க முடியும். எனினும், சட்டத்தில் பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்தாவிட்டால் நாங்கள் மாகாண சபைகளுக் கான தேர்தல் செயற்பாடுக ளைத் தொடர முடியாது.

அதன் அடிப்படையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்னாள் அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை முன்னெடுப் பதாக இருந்தால் பாராளுமன் றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை அவசியமாகின்றது. ஆனால், அந்தச் செயற்பாட்டை முன் னெடுப்பதற்கு முழுமையாக முடிந்திருக்கவில்லை.

அத்தோடு அவ்விடயம் ஒரு நகைச்சுவையாக மாறியுள்ளது. ஆகவேதான் அந்த ஏற்பாடுக ளைத் திருத்தியமைத்து பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை களை முன்னெடுக்கவுள்ளோம். என்றார். (அ)

# ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

அடுத்த வருடத்துக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

ஓய்வூதியத் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை யில் இது தொடர்பான விவரங் கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனவரி, பெப்ர வரி, மார்ச், செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு 10 ஆம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங் களில் 9 ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்படும்.

அதேநேரம், ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 7ஆம் திகதி ஓய்வூதிய கொடுப்ப னவுகள் வழங்கப்படும் என குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போக்குவரத்து விதிகளை மீறிய 8000 பேருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 31

போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆயிரத் துக்கும் அதிகமானோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அலுவல கம் தெரிவித்துள்ளது

பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள் ளும் நோக்கில் பொலிஸாரால் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

அதன்படி, நேற்று முன் தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தி யாலங்களில் 8068 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (அ)

# ஜனவரி 5 இற்கு முன் பயிர்ச்சேத இழப்பீடு!

கொழும்பு, டிசெ. 31

2024 ஆம் ஆண்டுக்கான பருவத்தில் வெள்ளம், வறட்சி மற்றும் காட்டு யானை தாக்கு தலினால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்கள் தொடர்பான அனைத்து நட்ட ஈடுகளையும் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவ தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் கிட்டத்தட்ட 80 வீத விவசாயிகளுக்கு கிட் டத்தட்ட 80 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்க முடிந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீதமுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஜனவரி 05 ஆம் திகதிக்குள் உரிய இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இங்கு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக நட்டஈட்டுத் தொகையை வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், மிகக் கவனமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா கவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், 2024-2025 பருவகாலம் தொடர்பான நட்ட ஈடுகளை பெப்ரவரி மாத ஆரம்பத்துக்குள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளதாகவும் குறித்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட் டுள் ளது. (அ)

# நாட்டில் மருந்தகங்கள் மூடப்படும் அபாயநிலை

## தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம்

கொழும்பு, டிசெ. 31

தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தும் அதிகாரசபையானது மருந்தகங்களின் செயற்பாட் டுக்கு தகுதிவாய்ந்த மருந்தாள ரின் முழுநேர இருப்பை கட்டா யமாக்கியுள்ளதால், நாடு முழுவ தும் உள்ள மருந்தகங்கள் மூடப் படும் அபாயத்தை எதிர்கொள் கின்றன என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையா ளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இந்த விடயத்தைப் பற்றி கலந் துரையாடுவதற்காக அமைச்ச ரைத் தொடர்பு கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பல முயற் சிகள் வெற்றி பெறவில்லை என்றும் இதனால் ஜனவரியில் நிலைமை மோசமடையும் என் றும் அச்சங்கம் கவலை வெளி யிட்டுள்ளது.

அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சண்டிக கங்கந்த தெரிவிக்கையில்- தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத் தும் அதிகார சபையின் அறி விப்பால் ஏற்பட்டுள்ள நிலை மையைப் பற்றி கலந்துரை யாடுவதற்காக அமைச்சர் மற் றும் தொடர்புடையவர்களை நாங்கள் கோரி வருகிறோம். ஆனால் எங்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

குறித்த முடிவினால் ஏற்பட் டுள்ள எதிர்மறையான தாக் கத்தை புரிந்து கொள்ள வேண்டும். நாடாளவிய ரீதியில் செயற்படும் மருந்தகங்களின் எண்ணிக்கை குறைந்து வரு கிறது. பொதுமக்கள், குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள நோயாளிகள் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள்.

கிராமப் புறங்களில் உள்ள மருந்தகங்கள் மூடப்படுவது அப்பகுதிகளில் பொதுமக் களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாக உள்ளது. ஏனெனில் அந்த மக்கள் மருந்துகளைப் பெற கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்க ளுக்குச் செல்லவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆகவே இந்த விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்ப டாவிட்டால் இந்தப் பிரச்னை கள் தொடர்ந்து மோசமடை யும் ஆபத்துள்ளது.

மருந்தாளரின் பதிவு முறையை அகற்றுவதல்ல எமது கோரிக்கை. தகுதி வாய்ந்த மருந்தாளுநர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதே எமது கோரிக்கையாகும்.

நாடு முழுவதும் தற்போது செயற்பாட்டில் உள்ள 5,100 மருந்தகங்களில், தகுதிவாய்ந்த மருந்தளர்கள் பற்றாக்குறையால் பல மருந்தகங்கள் மூடப்படும் நிலைமையில் உள்ளன-என்றார்.

# இடைநிறுத்தப்பட்டிருந்த திட்டங்கள் மீள ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 31

இடைநிறுத்தப்பட்ட பல சர்வதேச மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள் புதிய அரசாங்கத்தின் மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.

களுத்துறை மாவட்ட அபி விருத்திக் குழுத் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஜயதிஸ்ஸ இதனைக் கூறினார்.

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான கலந்து ரையாடல்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவித்த அவர், வளமான ஆரம்பம் ஒன்றை அடுத்த வருடத்தின் தொடக்கத் தில் இலங்கை எதிர்பார்க்க முடி யும் எனவும் மேலும் குறிப் பிட்டார்.

வெளிநாட்டு இராஜதந்தி ரிகள் மீண்டும் நம்பிக்கையைப் பெற்றுள்ளதுடன் இலங்கை யுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர் என்று அவர் கூறினார்.

குறுகிய காலத்தில் பங்குச் சந்தை சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளதாக அமைச்சர் ஜயதிஸ்ஸ மேலும் சுட்டிக் காட்டினார்.

ஸ்திரத்தன்மையை நோக் கிய பாதையில் இலங்கை நகர் கிறது என்பதை சர்வதேச சமூ கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அர சாங்கம் பதவியேற்று 03 மாதங் களுக்குள் நாட்டை ஸ்திரப் படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மின் கட்டண திருத்தம் குறித்து இறுதித் தீர்மானம் 17ஆம் திகதி

கொழும்பு, டிசெ. 31

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி தீர்மா னத்தை எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை தற்போது முன் னெடுக்கப்படுவதாக ஆணைக் குழு கூறியுள்ளது.

மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களி லும் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் ஏனைய மாகாணங்க ளிலும் பொதுமக்கள் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்ப டவுள்ளது.

இந்த நடவடிக்கையின் பின்னர் எடுக்கப்படும் இறுதி தீர்மானம் எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கப்படுமென ஆணைக்குழு உறுதிப்படுத்தி யுள்ளது.

இதனிடையே, மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்கு விப்பு கொடுப்பனவையும் வழங்கி மின்சாரக் கட்டணத் தையும் 6 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான பரிந்துரைகள் கடந்த அரசாங்கத்தின் காலப் பகுதியிலேயே முன்வைக்கப் பட்டுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதித் திட்டத்தின் ஊடாகவே எமது அரசு வீழ்த்தப்பட்டது!

### கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 31

**ஒவ்வொரு ஜனாதிபதியின் கீழும் ஜனாதிபதி நிதியை பயன்படுத்திய நபர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



தனது குடும்பத்தில் எவருக்கும் ஜனாதிபதி நிதி வழங்கப்படவில்லை எனவும், அந்த நிதியை யாரும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் அவர் கூறினார்.

2022ஆம் ஆண்டு சதித் திட்டத்தின் மூலம் பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின்போது பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கட்சிக்கு பதிலாக பல வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ள நிலையில் புதிய வேட்புமனுக்களை கோருவது நல்லது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கீழ் வேட்புமனு தாக்கல் செய்த பலர் தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதால் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தற்போதுள்ள வேட்புமனுக்களின் கீழ் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2022ஆம் ஆண்டு சதித் திட்டத்தின் மூலம் பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. அப்போது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சக்திகள் நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையச் செய்யும் அளவுக்கு சூழ்ச்சி செய்தன.

அப்போது ரணிலை ஜனாதிபதியாக நியமித்தோம். ரணிலின் வேலைத்திட்டத்தையே இந்த அரசாங்கம் நடத்துகின்றது.

ஒரு அமைச்சர் அல்லது அரசியல் தொடர்புள்ள ஒருவர் ஜனாதிபதி நிதியில் இருந்து பணம் செலவழிப்பதாக கூறப்படுவதுடன், இதுவரை ஜனாதிபதி நிதியத்தினால் உதவி செய்யப்பட்ட ஏனையவர்களின் பெயர்களையும் வெளியிடவேண்டும்.

இதன்படி, ஒவ்வொரு ஜனாதிபதியின் கீழும் ஜனாதிபதி நிதியை பயன்படுத்திய நபர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட வேண்டும். எங்களின் குடும்பத்துக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் வழங்கப்படவில்லை.

அதிலிருந்து நாங்கள் பணத்தை எடுப்பதும் இல்லை- என்றார். (அ)

# கறுவா பயிர்ச்செய்கையை விரிவுபடுத்த நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 31

நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றான கறுவாச் செய்கையின் மூலம் வருடத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கறுவா உற்பத்தி வருடத்துக்கு 25000 மெற்றிக் தொன்களாகும்.

இதில் கிட்டத்தட்ட 19,000 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கறுவாப்பட்டை ஏற்றுமதி மூலம் இலங்கை தற்போது சுமார் 250 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை ஈட்டி வருவதாக கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.

வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, பாரம்பரியமாக கறுவா பயிரிடப்பட்டு வரும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு மேலதிகமாக குருநாகல், புத்தளம் மற்றும் மகாவலி பிரதேசங்களில் கறுவாப் பட்டை செய்கையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர தெரிவித்துள்ளார்.

(அ)

# நெவில் சில்வாவுக்கு பிணை

கொழும்பு, டிசெ. 31

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நெவில் சில்வா இரத்தினபுரி நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணையில் நெவில் சில்வா விடுவிக்கப்பட்டார். 14 கோடி ரூபாய் பெறுமதியான இரத்தினக்கற்கள்,வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்களை பலவந்தமாக அபகரித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டார்.

(அ)

# அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாட்டால் மக்கள் சிரமம்

கொழும்பு, டிசெ. 31

புது வருடப்பிறப்புக்கு இன்னும் ஒரு நாளே எஞ்சியுள்ளன. புத்தாண்டுக்கான உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்ய மக்கள் அதிகளவில் நாட்டம் காட்டும் நிலையில், சந்தையில் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

அவற்றுள் அரிசி தட்டுப்பாடு முதன்மையான பிரச்னையாக மாறியுள்ளது. அதன்படி பல மாதங்களாகச் சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார்த் துறையினரால் நேற்று முன் தினம் வரையில் 75,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட அரிசி இறக்குமதிக்கான ஒதுக்கீடும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

குறித்த அரிசித் தொகையில், 32,000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 43 ஆயிரம் மெற்றிக் தொன் நாடு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அரசாங்கம் இறக்குமதி செய்யவிருந்த 5,200 மெற்றிக் தொன் அரிசித் தொகை கடந்த 16 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என கூறப்பட்டபோதிலும் அது கடந்த 24 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டது.

இந்த நிலையில், குறித்த அரிசித் தொகை நாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை.

இதேவேளை சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, ஒரு கிலோ பூசணிக்காய் தற்போது 300 முதல் 400 ரூபாய் வரையிலும், ஏனைய மரக்கறிகள் கிலோவொன்றின் 500 முதல் 800 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# பல்கலைக்கழக வளாகங்களாக மாறும் கல்வியியல் கல்லூரிகள்!

கொழும்பு, டிசெ. 31

தேசிய கல்வியியல் கல்லூரிகள் இலங்கை கல்விப் பல்கலைக்கழக வளாகங்களாக மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேசிய கல்வியியல் கல்வி கல்லூரிகளும் புதிதாக உருவாக்கப்படவுள்ள இலங்கை கல்வி பல்கலைக்கழகத்தின் வளாகங்களாக மாற்றம் பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரம்பரிய பல்கலைக்கழக முறைமையில் இருந்து வேறுபட்டதொரு பல்கலைக்கழக முறைமைக்குள் இப்பல்கலைக்கழகமும் வளாகங்களும் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக 20 தேசிய கல்விக் கல்லூரிகள் தற்போது நாடுதழுவிய ரீதியில் இயங்கி வருகின்றன.

1985 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு முதல் 20 தேசிய கல்விக் கல்லூரிகள் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றன. இந்நிலையில், 20 ஆவது தேசிய கல்விக் கல்லூரியாக குளியாப்பிட்டி தொழில் நுட்பக் கல்வியியல் கல்லூரி அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 08 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் மேற்படி பல்கலைக்கழக வளாகங்களின் கற்றல் நிலையங்களாக மாற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.பிரதான கல்வி பல்கலைக் கழமாக தற்போதைய மகரகம தேசிய கல்வியியல் கல்லூரி செயற்படும் எனவும், இப்பிர தான பல்கலைக்கழகம் ஊடா கவே கல்விமாணிப் பட்டம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கில் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, மலையகத்தில் தலவாக்கல்லை, மேல்மாகாணத்தில் அழுத்கம ஆகிய பிரதேசங்களில் தமிழ் மொழி மூல தேசிய கல்வியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதே போல் வடக்கில் கோப்பாய், கிழக்கில் மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை, மலையகத்தில் கொட்டகல ஆகியவற்றில் ஆசிரிய கலாசாலைகளும் இயங்கி வருகின்றன.

உத்தேச இலங்கை கல்வி, பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின் கல்வியியல் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படாது. தற்போது தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி பட்டப்படிப்புகள் யாவும் உத்தேச இலங்கை கல்வி பல்கலைக் கழகத்தின் தொடருறு கல்வி நிலையங்களாக மாற்றம் பெறும் எனவும், இதனடிப்படையில் உத்தேச கல்வி பல்கலையின் கீழ் 20 வளாகங்களும் 08 கற்கை நிலையங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவன பிராந்திய கற்கை நிலையங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும் எனவும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. (அ)

# திசர நாணயக்காரவுக்கு பணம்வழங்கியவர்கள் தகவல் தருக!

கொழும்பு, டிசெ. 31

வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர நாணயக்காரவுக்கு பணம் வழங்கிய வேறு எவரேனும் இருப்பின் அது தொடர்பில் தகவல் வழங்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

குறித்த தகவல்களை வழங்குவதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றையும் அந்தத் திணைக்களம் வழங்கியுள்ளது.

அதன்படி 0112 337 219 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு குறித்த தகவல்களை வழங்க முடியும்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர நாணயக்காரவை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, 2019ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் அவரின் கணக்கில் 27 கோடி ரூபாய் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரரான திசர நாணயக்கார பிபிலை பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பின்லாந்தில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாக்கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பேருக்கு மேல் ஒரு மோ. சைக்கிளில் செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

## விபத்துகளை தவிர்க்க நிந்தவூர் பொலிஸார் வேண்டுகோள்

நிந்தவூர்,டிசெ.31

**நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வீதி விபத்துகள் அதிகரித்து வருவதால் பின்வரும் நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றுமாறு நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். குறிப்பாக ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.**

எனவே, இதனைக் கருத்தில் இரண்டு பேருக்கு மேல் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறுவர்கள் மற்றும் உரிய சாரதி அனுமதிப்பத்திரம் அற்றவர்களுக்கு மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்கு வழங்குகின்றனர். அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தலைக்கவசம் இன்றியும் அதிக வேகத்துடனும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் செல்வதை முற்றாக தவிர்த்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

# 6 அடி நீளமான முதலை உயிருடன் பிடிக்கப்பட்டது



மட்டக்களப்பு, டிசெ.31

மட்டக்களப்பு, புளியந்தீவு வாவிக்கரை வீதி இரண்டில் சுமார் 6 அடி நீளமான முதலையொன்று பொதுமக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு பிரதேச ஆற்றில் தென்பட்ட இந்த முதலை ஞாயிற்றுக்கிழமை மாலை கரைக்கு வந்தது. இதன்போதே, பொதுமக்கள் முதலையைப் பிடித்தனர். (எ)

# கல்முனையில் நூலகங்களுக்கு புதிய நூல்கள் கையளிப்பு



கல்முனை, டிசெ.31

கல்முனை மாநகர சபைக் குட்பட்ட பொது நூலகங்களுக்கு புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் வழங்கப்பட்டன.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, புதிதாக வெளிவந்துள்ள கல்வி, சமூகம், கலாசாரம், கவிதை, கலை, இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பல்துறை அறிவு சார்ந்த நூல்களும் க. பொ. த. உயர்தர பரீட்சைகளின் கடந்த கால மற்றும் மாதிரி வினாப் பத்திரங்கள் அடங்கிய பெறுமதியான புதிய நூல்களும் வழங்கப்பட்டன.

கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களுக்கான ஒவ்வொரு தொகுதி நூல்கள் சம்பிரதாயபூர்மாக கையளிக்கப்பட்டன. (எ)

# கல்வி, வாழ்வாதாரம் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர உறுதி

திருகோணமலை, டிசெ.31

கிராமப்புற மக்கள் எதிர்நோக்கும் கல்வி, வாழ்வாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட பிரச்னைகள் முதலானவற்றை இனம் கண்டு அவற்றை எதிர்காலத்தில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பாட்டாளிபுரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்று போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் சம்மந்தமான விளக்கம் அளிக்கப்பட்டதுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் கேட்டறிந்து கொண்டதுடன் பிள்ளைகளின் கல்வி நிலைமை பற்றியும் ஆராயப்பட்டது.



இந்தக் கிராமத்தில் எம் கடமை அமைப்பினரால் நடத்தப்படும் இலவசக் கல்வி நிலையம், கிராமத்துக்கு வழங்கப்படும் ஏனைய உதவிகள் பற்றி மக்களிடமும் எம்கடமை அமைப்பினருடனும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் அமைப்பின் செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்தி இந்த பிரதேச பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்கு எமது அரசாங்கம் என்றும் ஆதரவு வழங்கும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (எ)

# முன்பள்ளி சிறார்களின் கலைவிழா



திருகோணமலை, டிசெ.31

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிப் பொத்தானை பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா நேற்று நடைபெற்றது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி பொறுப்பாளர் எம். சமீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்பள்ளி சிறார்களால் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. (எ)

# நோய்வாய்ப்பட்ட நிலையில் அவதிப்படும் யானைக்குட்டி

மட்டக்களப்பு, டிசெ.31

மட்டக்களப்பு, காவத்தமுனை வாகநேரி வயல்வெளி பிரதேசத்தில் நோய்வாய்ப்பட்ட நிலையில் 6 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி ஒன்று விழுந்து கிடக்கிறது.

நடக்க முடியாத நிலையில் அவதிப்படும் இந்த யானைக் குட்டி தொடர்பில் கிரான் பிரதேச வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் குறித்த வயல் பிரதேசத்தில் தனிமையில் அலைந்து திரிந்த இந்த யானைக்குட்டி உடல் மெலிந்து உணவு உற்கொள்ள முடியாத நிலையில் பலவீனமுற்ற நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, காவத்தமுனை, மஜ்மா நகர் மற்றும் நாவலடி ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் அவற்றிடமிருந்து, தங்களைப் பாதுகாப்பதற்கு யானை தடுப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்க கல்முனை கிளை கௌரவிப்பு நிகழ்வு

கல்முனை, டிசெ. 31

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் வருடாந்த ஒன்று கூடலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களாக பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்றவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் அக்கரைப்பற்று மெங்கோ கார்டனில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவரும் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகருமான ஜே. எம். நிஸ்தார் தலைமையில் நடை பெற்ற



இந்த நிகழ்வில் கல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு மதி சகீலா இஸ்ஸதீன், பிரதம விருந்தினராகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம். மாஹிர் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். இராணுவம் - தலிபான் நேரடி மோதலில் 27 பேர் பலி

## எல்லையில் தொடரும் பதற்றம்

இஸ்லாமாபாத், டிசெ.31

**பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் தலிபான் அமைப்பை சேர்ந்த 8 பேர் உயிரிழந்தனர். இதேவேளை, பாகிஸ்தான் இராணுவத்தினர் 19 பேர் பலியாகினர்.**

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மற்றும் தலிபான்களிடையே மோதல் வெடித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருக்கும் தெஹ்ரிக்-இ-தலிபான் என்ற அமைப்பை சேர்ந்தவர்கள் பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருவதாக பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தான் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில் 8 தலிபான்கள் பலியானதாகவும், பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. இதே வேளை, பாகிஸ்தான் இராணுவத்தினர் 19 பேரை சுட்டுக் கொன்றதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# அமெ. முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார்



வாஷிங்டன், டிசெ.31

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் காலமானார். அவருக்கு வயது 100. அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர் ஜிம்மி கார்ட்டர். இவர் 1977 முதல் 1981ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக செயல்பட்டார்.

இந்த நிலையில், வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட ஜிம்மி கார்ட்டர் காலமானார். ஜார்ஜியா மாகாணம் பலின்ஸ் நகரில் உள்ள அவரது வீட்டில் ஜிம்மி கார்ட்டர் காலமானார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவரது மறைவு பல்வேறு நாட்டுத் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (எ)

# சத்ரபதி சிவாஜி சிலை சீன எல்லையில் திறப்பு

புதுடில்லி, டிசெ.31

இந்தியா - சீனா எல்லையில் 14, 300 அடி உயர மலைச் சிகரத்தில் மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி சிலையை இந்திய இராணுவம் நிறுவியுள்ளது.

இந்தச் சிலையை திறந்து வைத்து இந்திய இராணுவத்தின் 14ஆவது படைப்பிரிவின் லெப்டினன்ட் ஜெனரல் ஹித்தேஷ் பல்லா, எக்ஸ் வலைத்தளத்தில் கூறியுள்ளதாவது, "கிழக்கு லடாக் செக்டா ரில் சீனாவை ஒட்டியுள்ள எல்லை கட்டுப்பாட்டு கோட்டு (எல்ஏசி) பகுதியில் மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் சிலை நிறுவப்பட்டுள்ளது.



14, 300 மலைச் சிகரத்தில் பாங்கோங் ஏரி பகுதியில் இந்திய இராணுவம் அமைத்துள்ள இந்த சிலை சிவாஜியின் வீரம், தொலைநோக்கு பார்வை மற்றும் அசைக்க முடியாத நீதியின் உயர்ந்த சின்னமாக திகழும். மேலும், வரும் தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்கும் ஆதாரமாக இது விளங்கும். பண்டைய கால சிறப்புகளை சமகால இராணுவ களத்தில் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை இந்திய இராணுவம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது"- என்று ஹித்தேஷ் குறிப்பிட்டுள்ளார். (எ)

விமான விபத்தில் 179 பேர் பலி!

# பகிரங்க மன்னிப்பு கோரினார் ஜேஜு ஏர் நிறுவன அதிகாரி

சியோல், டிசெ.31

தென்கொரியாவில் தரையிறங்கும்போது விமானம் வெடித்து 179 பேர் பலியான சம்பவத்துக்கு ஜேஜு ஏர் நிறுவன தலைமை அதிகாரி பகிரங்க மன்னிப்பு கோரினார்.



தென்கொரியாவின் முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்தபோது, விமானம் ஒன்று திடீரென வெடித்து சிதறியது. இந்த விபத்தில் சிக்கி 179 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் குறித்த விமானம் விபத்துக்குள்ளாவதை தவிர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதாக ஜேஜு ஏர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி கிம் இ - பே தெரிவித்துள்ளார். அத்தோடு, விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், "பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதே எங்களின் முதன்மையான முன்னுரிமை. விபத்தில் உயிரிழந்த பயணிகளுக்கும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. மேலும், அரசு நிறுவனங்களின் அதிகாரபூர்வ விசாரணைக்காக நாங்கள் காத்திருக்க வேண்டும். காரணம் எதுவாக இருந்தாலும், தலைமை நிர்வாக அதிகாரியாக நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்"- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# விமான விபத்து தொடர்பில் விரிவான ஆய்வுக்கு உத்தரவு

## தென்கொரியாவில் 7 நாட்கள் துக்கதினம்

சியோல், டிசெ.31

தென்கொரியாவில் விமானம் விபத்துக்குள்ளாகி 179 பேர் உயிரிழந்த நிலையில், நாட்டின் விமான போக்குவரத்து அமைப்பின் பாதுகாப்பு தரத்தை முழு வீச்சல் ஆய்வு செய்யும்படி தற்காலிக ஜனாதிபதி சோய் சாங் மாக் உத்தரவிட்டுள்ளார். விபத்துக்குள்ளான ஜேஜு விமானத்தை மீட்கும் பணி முழுமையாக நிறைவு பெற்ற பின்னர், இந்த ஆய்வை தொடங்கும்படி அவர் அறிவுறுத்தியுள்ளார். விமானங்களின் தரம், விமான போக்குவரத்து மேலாண்மை, விமான நிலைய ஓடுபாதைகளின் நிலை என அனைத்தையும் உள்ளடக்கி விரிவான ஆய்வுக்கு இடைக்கால அரசின் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தென்கொரிய வரலாற்றில் மிக மோசமான விமான விபத்தாகக் கருதப்படும் இந்த விபத்தையடுத்து 7 நாட்கள் தேசிய அளவில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித் துள்ளது. (எ)

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு அறுவை சிகிச்சை



ஜெருசலேம், டிசெ.31

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு புரோஸ்டேட் அகற்றும் அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நெதன்யாகுவுக்கு கடந்த வாரம் உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் ஜெருசலேமில் உள்ள ஹடாசா மருத்துவ மையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதில் அவரது சிறுநீர் பாதையில் தொற்று கண்டறியப்பட்டது. இதனையடுத்து நெதன்யாகுவுக்கு புரோஸ்டேட் அகற்றும் அறுவை சிகிச்சை செய்யப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் நெதன்யாகுவுக்கு குடலிறக்க அறுவை சிகிச்சை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

# இந்தியர்கள் அனைவருக்கும் தமிழ் மொழியால் பெருமை!

## பிரதமர் மோடி தெரிவிப்பு



புதுடில்லி, டிசெ.31

"உலகிலேயே மிகவும் தொன்மையான மொழி தமிழ் மொழியாகும். இது, இந்தியர்கள் அனைவருக்கும் பெருமிதமான, பெருமை சேர்க்கும் விடயம்"- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அகில இந்திய வானொலி மூலம் நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், "உலகெங்கிலும் உள்ள நாடுகளில் தமிழ் மொழியை படிப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த மாத இறுதியில் பிஜியில் இந்திய அரசின் ஆதரவுடன் தமிழ் கற்பித்தல் திட்டம் தொடங்கப்பட்டது. கடந்த 80 ஆண்டுகளில் பிஜியில் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் தமிழ் மொழியை பயிற்றுவிப்பது இதுவே முதல்முறை. பிஜி மாணவர்கள் தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் கற்றுக்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சம்பவங்கள் வெறும் வெற்றிக் கதை அல்ல. நம்மை பெருமிதத்தால் நிரப்புபவை. மொழி, இசை, கலை, ஆயுர்வேதம் என பாரதத்தில் அனைத்தும் கொட்டிக் கிடக்கிறது. அதனால்தான் இந்தியா உலகளவில் முத்திரை பதித்துக் கொண்டிருக்கிறது"- என்றார். (எ)

# ஓடுபாதையில் உரசியதால் விமானத்தில் தீ பற்றியது!

ஒட்டாவா, டிசெ.31

கனடாவில் தரையிறங்கும்போது, ஓடுபாதையில் உரசியதால் விமானம் ஒன்றில் திடீரென தீ பற்றியது. இருப்பினும், அதிர்ஷ்டவசமாக 80 பயணிகளும் உயிர்தப்பினர்.

கனடாவின் ஹாலிபேக்ஸ் விமானநிலையத்தில் "ஏர் கனடா" நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் 80 பயணிகளுடன் தரையிறங்கும்போது கியரில் பழுது ஏற்பட்டது. இதனால் இறக்கை பகுதி ஓடுபாதையில் உரசி, விமானத்தில் திடீரென தீ பற்றியது.

விமானத்தில் தீ பற்றியதை பார்த்த பயணிகள் பயத்தில் அலறத் தொடங்கினர். இதற்கிடையில் விமான நிலைய அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர்.

இந்த சம்பவத் தில் விமானத்தில் இருந்த 80 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் 2024



## ஜனவரி



*7:* வங்கதேசத்தில் நடைபெற்ற தேர்தலில் அவாமி லீக் கட்சி வெற்றி பெற்று அதன் தலைவர் ஷேக் ஹசீனா 5-ஆவது முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சாதனை படைத்தார்.

*9:* பிரான்ஸின் புதிய பிரதமராக கேப்ரியல் அட்டலை அதிபர் இமானுவல் மக்ரோன் நியமித்தார்.

*11:* காஸா போரில் ஹமாஸுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திவரும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா முதல்முறையாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

## பெப்ரவரி

*9:* பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தடை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சி ஆதரவு வேட்பாளர்கள் 95 இடங்களைக் கைப்பற்றி முதலிடம் பிடித்தனர். ஆனால், 64 தொகுதிகளில் மட்டுமே வென்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் இணைந்து புதிய அரசை அமைத்தது.



*16:* ரஷ்ய அதிபர் விளாதிமீர் புடினை கடுமையாக எதிர்த்து வந்த முக்கிய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னி, சிறையில் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

## மார்ச்

*7:* நேட்டோ ராணுவக் கூட்டமைப்பில் ஸ்வீடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைத் தொடர்ந்து பாதுகாப்புக்காக நேட்டோவில் இணைய ஸ்வீடன் விண்ணப்பத்திருந்தது.

*19:* புவியின் வெப்பநிலையைப் பதிவு செய்யத் தொடங்கிய 174 ஆண்டுகளில் 2024ஆம் ஆண்டுதான் மிக அதிக உஷ்ணமான ஆண்டு என்று உலக வானிலை அமைப்பு அறிவித்தது.

## ஏப்ரல்

*14:* இஸ்ரேல் மீது ஈரான் 300-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் மீது அந்த நாடு நேரடியாக தாக்குதல் நடத்தியது அதுவே முதல்முறை.

## மே

*7:* ரஷ்ய அதிபராக விளாதிமீர் புதின் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றார்.



*31:* தேர்தல் நேரத்தில் தன்னைப் பற்றிய ரகசியத்தைப் பாதுகாப்பதற்காக நடிகைக்கு முறைகேடாக பணம் கொடுத்த வழக்கில் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அதிபராக இருந்த ஒருவர் மீது குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது அமெரிக்க வரலாற்றில் அதுவே முதல்முறை.

## ஜூன்

*3:* மெக்ஸிகோவின் முதல் பெண் அதிபராக கிளா டியா ஷீன்பாம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*5:* இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம் மற்றும் மற்றொரு நாசா விஞ்ஞானியுடன் போயிங் நிறு வனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் சர்வதேச விண் வெளி நிலையத்துக்குச் சென்றது. இருந்தாலும், அந்த விண்கலத்தில் பழுது ஏற்பட்டதால் அவர்கள் திரும்ப பூமிக்கு வரமுடியாமல் அங்கேயே தங்கி யுள்ளனர். ஸ்பேஸ்-எக்ஸ் விண்கலம் மூலம் வரும் மார்ச் மாதம் அவர்களை திரும்ப அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளது.

*19:* சவூதி அரேபியாவில் ஹஜ் புனிதப் பய ணம் மேற்கொண்ட 80 இந்தியர்கள் உள்பட 922 பேர் அதீத வெயில் காரணமாக உயிரிழந்தனர்.

*24:* அமெரிக்க அரசுடன் மேற்கொண்ட சட்ட ஒப்பந்தத்தின் கீழ், லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்திலும், பின்னர் சிறையிலும் பல ஆண்டுகளாக அடைபட்டிருந்த விக்கிலீக்ஸ் வலைதள நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே விடுவிக்கப்பட்டார்.

## ஜூலை

*11:* ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அளித்து வந்த நேட்டோ நாடுகள், அந்த நாட்டு அதிநவீன எஃப்-16 விமானங்களை அனுப்பத் தொடங்கியதாக அறிவித்தன.



*14:* அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது நடந்த படுகொலை முயற்சியிலிருந்து குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் நூலிழையில் தப்பினார். அவரை நோக்கி சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று அவரின் காதை லேசாக உரசிச் சென்றது.

*21:* வயது மூப்பு காரணமாக, அதிபர் தேர்தலில் இருந்து விலகுவதாக ஜனநாயகக் கட்சி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அதிபர் ஜே பைடன் அறிவித்தார். அவருக்குப் பதிலாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துணை அதிபர் கமலா ஹாரிஸ் கட்சி வேட்பாளராக பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



*29:* வெனிசூலாவில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய அதிபர் தேர்தலில் நிக்கோலஸ் மடூரோ மீண்டும் வெற்றதாக அறிவிக்கப்பட்டது. எனினும், இந்தத் தேர்தலில் தாங்கள்தான் வெற்றியடைந்ததாக கூறிய எதிர்க்கட்சிகள், தேர்தல் முடிவை புறக்கணித்தன.

## ஓகஸ்ட்

*5:* வங்கதேசத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான விடுதலைப் போரில் பங்கேற்றவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணிகளில் 30 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் நடத்தி வந்த போராட்டத்தில் பிரதமர் இல்லத்தை போராட்டக்காரர்கள் கைப்பற்றினர். அதற்கு முன்னர் ஷேக் ஹசீனா ராஜிநாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

*8:* வங்கதேச இடைக்கால அரசின் தலைமை ஆலோசகராக, நோபல் பரிசு பெற்ற சமூக ஆர்வலரும் தொழிலதிபருமான முகம்மது யூனுஸ் பொறுப்பேற்றார்.

## செப்ரெம்பர்

*17:* லெபனானின் ஹிஸ்புல்லா படையினரைக் குறிவைத்து பேஜர்களில் முன்கூட்டியே பொருத்தி வைத்திருந்த சிறிய வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 42 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து, ஹிஸ்புல்லா படையினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே பதற்றம் புதிய உச்சத்தை அடைந்தது.

## ஒக்ரோபர்

*17:* காஸாவில் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டார்.



*26:* தங்கள் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடியாக, ஈரான் ராணுவ நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

## நவம்பர்

*5:* அமெரிக்காவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார். 78 வயதாகும் டிரம்ப், அமெரிக்காவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிக அதிக வயதுடையவர் ஆவார்.



*19:* அணு ஆயுத நாடுகளின் உதவியுடன் அணு ஆயுதமற்ற நாடுகள் தங்கள் மீது தாக்குதல் நடத்தினாலும், அந்த நாட்டின் மீது அணு குண்டு வீச வகை செய்யும் கொள்கை மாற்றத்தை ரஷ்ய அதிபர் விளாதமீர் புடின் அறிவித்தார். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளைக் கொண்டு தங்கள் நிலப்பரப்பில் தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அந்த நாடு அனுமதி அளித்ததற்குப் பதிலடியாக இந்த அறிவிப்பை புடின் வெளியிட்டார்.

## டிசெம்பர்

*8:* சிரியாவில் 13 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த உள்நாட்டுப் போரில் எதிர்பாராத திருப்பமாக, தலைநகர் டமாஸ்கஸை கிளர்ச்சிப் படையினர் கைப்பற்றினர். அல் அஸாத் குடும்பத்தின் 50 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.



*14:* அவசரநிலை அறிவித்த விவகாரத்தில் தென் கொரிய அதிபர் யூன் சுக் இயோலை நாடாளுமன்றம் பதவிநீக்கம் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகை...

சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்டது. பிறகு மீண்டும் இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. பிறகு மீண்டும் இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

வானிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்த சேவை நவம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை நிறுத்தம் செய்யப்படும் என கப்பல் நிறுவனம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் தமிழக மற்றும் இலங்கை இடையேயான கப்பல் போக்குவரத்து சேவை 2025 ஆம் ஆண்டு ஜன வரி மாதம் இரண்டாம் திகதி முதல் மீண் டும் தொடங்கும் என அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

அத்துடன் இதற்கான முன்பதிவு நத்தார் தினமான டிசெம்பர் 25 ஆம் திகதி முதல் தொடங்கியிருக்கிறது. மேலும் வாரத்துக்கு ஆறு நாட்கள் இந்த சேவை கிடைக்கும் என்றும், ஒரு முறை சென்று வருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் இந்திய மதிப்பில் 35 ஆயிரம் ரூபாய் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## தமிழரசுக்

நிலைப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனை கூறினார்.

ஒரு பொதுப்புள்ளி யில் சந்திப்பதற்கு தமிழர சுக் கட்சியின் பாராளு மன்றக் குழுத் தலைவர் சிறிதரனுடன் ஏற்க னவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ள தாகவும் அதேபோல் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனு டனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித் துள்ளதாகவும் கஜேந்திரகுமார் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தைகளை அடுத்த ஆண்டில் முன்கொண்டு செல்ல எதிர் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சி சரியான மாற்றங் களை செய்யுமானால் தமிழினத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் ஒரு சுபீட்சமாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் கூறினார். (அ)

## அரசியல்...

மன்னார் பஸ் நிலையம் முன்பாக இந்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப் பட்டு சமூக மயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றினால் விடுதலை செய்யப் பட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிக ளையும், புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே இந்த கையெழுத்துப் போராட்டம் இடம் பெற்றது.

இதில் அருட்தந்தையர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (அ)

## நிதிக்...

புலனாய்வுத் துறையின் கீழ் உள்ள ஒரு நிறுவனமாகும்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் குவிந்து கிடக்கும் முறைப்பாடுகளை விசாரிப்பது கடினமான பணியாக இருப் பதால், நிதிக் குற்றப் பிரிவு மற்றுமொரு பிரிவாக மீண்டும் ஸ்தாபிக்கப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தின்போது நாட் டில் இடம்பெற்ற பாரிய நிதி முறைகேடு கள், மோசடிகள் மற்றும் ஊழல் வழக்கு கள் தொடர்பான விசாரணைகள் புதி தாக நிறுவப்பட்டுள்ள நிதிக் குற்றப் பிரி வினூடாக விசாரிக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காணாமல்...

முன்னெடுக்கப்பட்டு வரும் போராட் டத்தின் ஓர் அங்கமாக நேற்று உறவினர் கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போரட்டம் நேற்று காலை யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட் டது.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட் டமானது ஊர்வலமாக யாழ்.பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி யூடாக சென்று யாழ் மத்திய பஸ் நிலை யத்தை அடைந்தது.

யாழ் மத்திய பஸ் நிலையத்தில் ஒன்று கூடிய உறவுகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைகுறித்து சர்வதேசமே தீர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சியிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகளின் போராட்டம் 2871 நாட்களாக தொடர்கின்ற நிலையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று காலை கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க அலுவலகம் முன்பாக இடம் பெற்றது. இதில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ.நாவே நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி நேற்று வவுனியாவிலும் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக போராட்டம் இடம் பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே, இராணுவத்தின ரிடம் கையில் ஒப்படைக்கப்பட்டவர்க ளுக்கு நடந்தது என்ன?, ஐ.நாவே நீதி யைப் பெற்றுத் தா?, 15 வருடமாக போராடும் எமக்கு விடிவு இல்லையா என பல கோசங்களை எழுப்பிய உறவு கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் தாங்கி யிருந்தனர். (அ-5-10)

# டான் தொலைக்காட்சியின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவையால் சிறப்புற்ற இச்செம்ம லுக்கு யாழ். மாநகர சபையின் யாழ். விருது (2018) தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் (2017) என ஐம்பதிற்கும் மேற்பட்ட கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டுள் ளன. இந்த வகையில் டான் தொலைக் காட்சி தனது உயரிய விருதான சாத னைத் தமிழனாக இப்பெருந்தகையைக் கௌரவிக்கின்றது.

சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகன் (2018), திருமறைக்கலாமன்ற இயக்குநர் (மறைந்த) அருட்கலாநிதி நீ. மரியசேவியர் (2019), நாடகத்துறைப் பேராசிரியர் சி. மௌனகுரு (2020) முல்லைமண்ணின் தொழில் முயற்சியா ளர் சாஜிராணி (2021), யாழ். பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் (2022) இசையமைப்பாளர் கண்ணன் (2023) என்ற வரிசையில் 2024 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்குவதில் டான் குழு மம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள் கின்றது.

# சிறைகளில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க நடவடிக்கை!



கொழும்பு, டிசெ. 31

சிறைச்சாலைகளில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளை தடுப்ப தற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்துடன் தொடர்புடைய நபர்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்த ஜனாதிபதி, அதற்காக இணை யவழி(ஒன்லைன்) முறையைப் பின்பற் றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார்.

ஒன்லைன் முறையின் ஊடாக வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களைக் கண்டறிந்து அது தொடர்பான உட்கட்டமைப்பை மேம்படுத்துமாறும் ஜனாதிபதி அறி வித்தார்.

சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகேடுகளில் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இதனுடன் தொடர்புள்ள அதிகாரி களுக்கு நிறுவன மட்டத்திலான ஒழுக்காற்று நடைமுறைகளுக்கு அப் பால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவ து தொடர்பிலும் கலந்துரையாடப்பட் டது.

இந்த கலந்துரையாடலில் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜே பால, நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர் ஷன நாணயக்கார, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி அயேஷா ஜினசேன, சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## யாழில்...

இந்நிலையில் குறித்த நபர் நேற்று வேலைக்காக சென்றிருந்தார். பின்னர் மகன் வேலைக்குச் சென்றபோது அங்கு தந்தை மயக்கமடைந்து இருந்ததை அவ தானித்தார்.

குறித்த விடயத்தை தாய்க்கு தெரி யப்படுத்திய மகன், தாயை அழைத்து மயக்கமடைந்த தந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப் பித்தார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசார ணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சயனைட் அருந்திய தால் அவரது மரணம் சம்பவித்துள்ள தாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## ஆசியாவில்...

ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசியாவின் மிகவும் பெறுமதிமிக்க மற்றும் பசுமையான தீவாக இலங்கையை நிலைநிறுத்துவது பற்றியும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

சுற்றாடல் மற்றும் கலாசாரத் துறைகள் மூலம் சுற்றுலாவை மேம் படுத்துவது குறித்தும் இந்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதில் முறை யான மற்றும் முறைசாரா துறைகளில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

புத்தசாசன, மத அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சர் பேராசிரியர் ஹினி தும சுனில் செனவி, சுற்றாடல் அமைச்சர் கலாநிதி தம்மிக்க படபெந்தி, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் புத்திக ஹேவாவசம், வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி. எம்.ஜே.நிலான் குரே உள்ளிட்ட அதிகா ரிகள் இக்கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (அ)

## புதிய...

அத்துடன் புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ, இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும், புதிய கடற்படைத் தளபதி யாக ரியர் அட்மிரல் காஞ்சன பனா கொட நேற்று நியமிக்கப்பட்டுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கில்...

அதிகமான மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் இடைக் கிடையே மணித்தியாலத்திற்கு 30 முதல் 35 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமெனக் குறிப்பிடப்பட்டுள் ளது.

இந்த நிலையில், இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான பாதுகாப்பு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ)

## மகிந்தவை...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பார்த்து அர சாங்கம் அஞ்சுகின்றது.

அவரை அரசியலிலிருந்து நீக்கும் முயற்சியிலேயே அரசாங்கம் முயற்சிக் கின்றது. மகிந்த ராஜபக்ஷவை பாது காக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், பொய்யுரைத்து ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கம் தற்போது அடக்குமுறையை கையாள ஆரம்பித்துள்ளது. அதேபோன்று அர சாங்கம் வரிச்சுமையை குறைக்க நட வடிக்கை எடுப்பதாக கூறியது. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரியவில்லை.

பாற்சோறு இன்றி புத்தாண்டை ஆரம்பிக்கும் நிலையை பொய்யுரைத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஏற்படுத்தி யுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய அமைச்சர்களின் மீது அதிகரிக்கும் குற்றச்சாட்டு!

## ஒப்புக்கொள்கிறார் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, டிசெ. 31

**புதிய அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புதிய அமைச்சர்கள் கடமைகளை ஆரம்பித்து ஐந்து வாரங்கள் மாத்திரமே நிறைவு பெற்றுள்ளது.

அமைச்சர்களை நேரில் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்கவில்லை, அவர்கள் தொலைபேசியில் உரையாடுவதில்லை, ஊடக அறிக்கைகளை வெளியிடுவதில்லை, நேர்காணலகளை வழங்குவதில்லை என குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

எவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் இலங்கை அரசுக்கு ஓர் சிறந்த அடித்தளத்தை அமைக்கும் பணியை நிறைவேற்றுவதற்கு எமது அமைச்சரவை அயராது உழைத்து வருவதை நான் பொறுப்புடன் கூற கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த அரசாங்கத்தில் இவ்வாறு அர்ப்பணிப்பின்றி முறையான ஆய்வுகளை மேற்கொள்ளாமல் தரவுகள் மற்றும் தகவல்கள் இன்றி, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் போன்றோர் பதவி வகித்தமையாலும், தன்னிச்சையான முடிவுகளை மேற்கொண்டமையாலும் உருவாக்கிய நெருக்கடிகளுக்கு இந்நாட்டு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த பொதுத் தேர்தலில் இந்நாட்டு மக்கள் பெரும்பான்மை பலத்தை எமக்கு வழங்கியுள்ளனர்.

இந்த ஐந்து வருட காலப்பகுதியில் நாட்டை முன்னேற்றாமல் ஏனைய அரசாங்கத்தைப் போல வேறு ஏதேனும் விடயங்களை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அரசாங்கத்தால் முன்னேறிச் செல்வது எளிதான விடயம். எனினும் நாடு ஒருபோதும் முன்னேறாது - என்றார். (அ)

# இலங்கையை ஆபத்திலிருந்து மீட்க தயார் நிலையில் ரணில்!

## கூறுகிரார் வஜிர அபேவர்தன

கொழும்பு, டிசெ. 31

இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிலிருந்து மீட்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாக இருக்கின்றார் என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

அனுபவம் இல்லாதவர்களிடம் நாட்டை ஒப்படைக்க, மக்கள் எடுத்த தீர்மானத்தினால் இன்று அவர்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் தீர்வு வழங்கப்படமுடியாது காணப்படும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டு பிரச்னைகள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தபோது இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அந்த காலத்தில் அரிசிக்கான தட்டுப்பாடு இருக்கவில்லை, இலவசமாக மக்களுக்கு 20 கிலோ கிராம் அரிசி விநியோகம் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிகாரம் இருந்தாலும், அதிகாரம் இல்லை என்றாலும் உதவுவதற்கு ரணில் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மியன்மார் அகதிகளை சந்திக்க அனுமதி வழங்கப்படவேண்டும்!

## மனித உரிமை ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 31

நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக அவர்களைச் சந்திக்க அனுமதி வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதி பதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல்.டி.பி. தெஹிதெனிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் எழுத்து மூலம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மையில் மியன்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

கப்பலில் இருந்த 12 பணியாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீதமுள்ளவர்கள் முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்கு சென்றிருந்தனர்.

எவ்வாறாயினும், குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளை பார்வையிட அனுமதி வழங்க முடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளை சந்திக்க எவருக்கும் அனுமதி வழங்கக்கூடாது என குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் உத்தரவிட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதற்கமைய குறித்த கோரிக்கைக்கு பதிலளித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், புகலிடக் கோரிக்கையாளர்களை அணுகுவதற்கு அனுமதி வழங்குவது தமது திணைக்களத்தின் ஊடாக அன்றி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரின் ஊடாகவே என தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் வாய்மொழியாக இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும், குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் இது தொடர்பில் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கவில்லை எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் மூலமோ அல்லது வேறு வகையிலோ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை தொடர்ந்தும் பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமில் உள்ள அகதிகளில் 40 இற்கும் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுவதால், இது தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, ஆணைக்குழுவின் அதிகாரிகளின் தடையின்றி குறித்த அகதிகளிடம் செல்வதற்கு வசதியாக தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. (அ)

# அட்டகாசம் செய்த ஹரீன்



கொழும்பு, டிசெ. 31

முன்னாள் சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கொழும்பில் உள்ள பிரபல களியாட்ட விடுதி ஒன்றில் ஒன்றில் வன்முறையாக நடந்து கொள்வதைக் காட்டும் காணொளி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

அதனையடுத்து, முன்னாள் அமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள், அவரை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

சம்பவ இடத்திலிருந்து வெளியேறும்போது ஹரீன் கத்திக் கூச்சலிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சம்பவ இடத்திலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

அவரது குறித்த செயற்பாட்டால் களியாட்ட விடுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இறக்குமதி செய்யும் அரிசிக்கு 45 வீத வரி!

கொழும்பு, டிசெ. 31

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 45 வீத வரி விதிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசியின் விலை 150 ரூபாவுக்கு குறைவாகும் என அவர் கூறினார்.

எனினும் அந்த ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபாய் வரி விதிக்கப்பட்டு, அதிகபட்ச சில்லறை விலையாக கிலோ ஒன்று 230 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு இரண்டு முதல் பத்து ரூபாவாக காணப்பட்டதாகவும், மக்களுக்கு சலுகை விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வரலாற்றில் முதல் தடவையாக அரிசி கிலோ ஒன்றுக்கு 65 ரூபாய் அல்லது 45 வீத வரி அறவீடு செய்யப்படுவது தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழாகும் என முஜிபுர் ரஹ்மான் கூறினார். (அ)

# சொகுசு காரில் கஞ்சா கடத்திய ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்குடியிருப்புக்கு சொகுசு காரில் கேரளக் கஞ்சா கடத்திய சந்தேகநபர் ஒருவர் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், தேராவில் தேக்கங்காடுப் பகுதியில் புதுக்குடியிருப்பு போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் குறித்த வாகனத்தை மறித்துச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது குறித்த வாகனத்தில் 6 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியை சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சொகுசு வாகனத்தையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து சென்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.